# ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA


| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2021.10.21 |

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட பணவீக்கம் 2021 செத்தெம்பரில் வீழ்ச்சியடைந்தது

**முதன்மைப் பணவீக்கம்**

ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம் : 6.2%
ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் : 5.5%
மாதாந்த மாற்றம் : 0.25%

**மையப் பணவீக்கம்**

ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம்: 4.8%
ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் : 4.4%
மாதாந்த மாற்றம் : 0.5%

**தேநுவிசு ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றத்திலான அசைவு**




**தேநுவிசு இல் மாதாந்த சதவீத மாற்றத்திலான பங்களிப்பு**




தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (தேநுவிசு 2013=100)[1] (ஆண்டிற்கு ஆண்டு) மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம், 2021 ஓகத்தில் 6.7 சதவீதத்திலிருந்து 2021 செத்தெம்பரில் 6.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சிக்கு 2020 செத்தெம்பரில் நிலவிய உயர் தள புள்ளிவிபரத் தாக்கம் முழுமையாகக் காரணமாக அமைந்தது. அதேவேளை, உணவுப் பணவீக்கம், (ஆண்டிற்கு ஆண்டு) 2021 ஓகத்தில் 11.1 சதவீதத்திலிருந்து 2021 செத்தெம்பரில் 10.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த அதேவேளை உணவல்லாப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு) 2021 செத்தெம்பரில் 3.0 சதவீதமாக மாற்றமின்றிக் காணப்பட்டது.

ஆண்டுச் சராசரியின் அடிப்படையில் அளவிடப்படுகின்ற தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண், 2021 செத்தெம்பரில் 5.5 சதவீதமாக மாற்றமின்றிக் காணப்பட்டது.

உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டிலுமுள்ள பொருட்களின் விலைகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்களின் காரணமாக தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாதாந்த மாற்றம் 2021 செத்தெம்பரில் 0.25 சதவீதத்தினைப் பதிவுசெய்தது. மேலும், உணவு மற்றும் உணவல்லா வகைகளின் மாதாந்த மாற்றங்கள், முறையே 0.07 சதவீதத்தினையும் 0.18 சதவீதத்தினையும் பதிவுசெய்தன. அதற்கமைய, உணவு வகையினுள் பருப்பு, பெரிய வெங்காயம் மற்றும் உடன் மீன் என்பவற்றின் விலைகள் அதிகரித்த அதேவேளை அரிசி, காய்கறிகள் மற்றும் சீனி என்பவற்றின் விலைகள் வீழ்ச்சியினைப் பதிவுசெய்தன. மேலும், உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலைகளில், பிரதானமாக தளபாடத் துணைப் பொருட்கள், வீட்டுச் சாதனங்கள் மற்றும் வழமையான வீட்டுப் பராமரிப்பு (தளபாடம் மற்றும் தளபாடத் துணைப் பொருட்கள்), வெறியக் குடிவகைகள் மற்றும் புகையிலை (பாக்குகள்), நலம் ( மருத்துவ/ மருந்தகப் பொருட்கள் கொள்வனவு) மற்றும் கல்வி (சர்வதேச பாடசாலைக் கட்டணம்: ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை) போன்ற துணை வகைகளில் மாத காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட விலை அதிகரிப்புக்கள் காரணமாக அதிகரிப்பொன்று பதிவாகியது.

மேலும், ஆண்டிற்கு ஆண்டு மையப் பணவீக்கம், 2021 ஓகத்தின் 4.7 சதவீதத்திலிருந்து 2021 செத்தெம்பரில் 4.8 சதவீதத்திற்கு அதிகரித்த அதேவேளை, ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம் 2021 செத்தெம்பரில் 4.4 சதவீதமாக தொடர்ச்சியாக ஆறாவது மாதமாகவும் மாற்றமின்றிக் காணப்பட்டது.

---

[1] தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (2013 = 100) தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகின்றது.

தரவு இணைப்பு:

அட்டவணை 01: தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவுகள்
தளம் : 2013 = 100

| ஆண்டு | மாதம் | சுட்டெண் | | மாதாந்தச் சதவீத மாற்றம் | | ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மைய) | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மைய) | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மைய) | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மைய) |
| 2019 | சனவரி | 127.3 | 130.2 | 0.2 | 2.0 | 1.2 | 5.1 | 1.8 | 2.7 |
| | பெப்புருவரி | 126.7 | 131.3 | -0.5 | 0.8 | 2.4 | 5.5 | 1.7 | 3.0 |
| | மாச்சு | 126.4 | 131.8 | -0.2 | 0.4 | 2.9 | 5.8 | 1.7 | 3.3 |
| | ஏப்பிறல் | 127.3 | 132.6 | 0.7 | 0.6 | 3.6 | 6.3 | 1.9 | 3.7 |
| | மே | 128.7 | 133.0 | 1.1 | 0.3 | 3.5 | 6.3 | 2.0 | 4.0 |
| | யூன் | 129.2 | 133.0 | 0.4 | 0.0 | 2.1 | 6.1 | 2.0 | 4.4 |
| | யூலை | 129.4 | 133.4 | 0.2 | 0.3 | 2.2 | 6.1 | 1.9 | 4.7 |
| | ஓகத்து | 129.7 | 133.7 | 0.2 | 0.2 | 3.4 | 5.9 | 2.0 | 5.0 |
| | செத்தெம்பர் | 130.6 | 134.0 | 0.7 | 0.2 | 5.0 | 5.6 | 2.3 | 5.2 |
| | ஒத்தோபர் | 131.9 | 134.4 | 1.0 | 0.3 | 5.6 | 5.6 | 2.8 | 5.4 |
| | நவெம்பர் | 132.9 | 134.6 | 0.8 | 0.1 | 4.1 | 5.5 | 3.0 | 5.6 |
| | திசெம்பர் | 135.0 | 134.2 | 1.6 | -0.3 | 6.2 | 5.2 | 3.5 | 5.7 |
| 2020 | சனவரி | 137.0 | 135.3 | 1.5 | 0.8 | 7.6 | 3.9 | 4.1 | 5.6 |
| | பெப்புருவரி | 137.0 | 135.8 | 0.0 | 0.4 | 8.1 | 3.4 | 4.5 | 5.5 |
| | மாச்சு | 135.2 | 136.0 | -1.3 | 0.1 | 7.0 | 3.2 | 4.9 | 5.2 |
| | ஏப்பிறல் | 134.8 | 136.9 | -0.3 | 0.7 | 5.9 | 3.2 | 5.1 | 5.0 |
| | மே | 135.4 | 137.9 | 0.4 | 0.7 | 5.2 | 3.7 | 5.2 | 4.8 |
| | யூன் | 137.3 | 138.9 | 1.4 | 0.7 | 6.3 | 4.4 | 5.6 | 4.6 |
| | யூலை | 137.3 | 139.4 | 0.0 | 0.4 | 6.1 | 4.5 | 5.9 | 4.5 |
| | ஓகத்து | 137.8 | 139.9 | 0.4 | 0.4 | 6.2 | 4.6 | 6.1 | 4.4 |
| | செத்தெம்பர் | 138.9 | 140.4 | 0.8 | 0.4 | 6.4 | 4.8 | 6.2 | 4.3 |
| | ஒத்தோபர் | 139.1 | 140.5 | 0.1 | 0.1 | 5.5 | 4.5 | 6.2 | 4.2 |
| | நவெம்பர் | 139.8 | 140.6 | 0.5 | 0.1 | 5.2 | 4.5 | 6.3 | 4.2 |
| | திசெம்பர் | 141.2 | 140.5 | 1.0 | -0.1 | 4.6 | 4.7 | 6.2 | 4.1 |
| 2021 | சனவரி | 142.1 | 141.0 | 0.6 | 0.4 | 3.7 | 4.2 | 5.8 | 4.2 |
| | பெப்புருவரி | 142.8 | 141.3 | 0.5 | 0.2 | 4.2 | 4.1 | 5.5 | 4.2 |
| | மாச்சு | 142.1 | 141.8 | -0.5 | 0.4 | 5.1 | 4.3 | 5.3 | 4.3 |
| | ஏப்பிறல் | 142.2 | 142.5 | 0.1 | 0.5 | 5.5 | 4.1 | 5.3 | 4.4 |
| | மே | 143.6 | 143.7 | 1.0 | 0.8 | 6.1 | 4.2 | 5.4 | 4.4 |
| | யூன் | 145.7 | 144.6 | 1.5 | 0.6 | 6.1 | 4.1 | 5.4 | 4.4 |
| | யூலை | 146.6 | 145.6 | 0.6 | 0.7 | 6.8 | 4.4 | 5.4 | 4.4 |
| | ஓகத்து | 147.1 | 146.5 | 0.3 | 0.6 | 6.7 | 4.7 | 5.5 | 4.4 |
| | செத்தெம்பர் | 147.5 | 147.2 | 0.3 | 0.5 | 6.2 | 4.8 | 5.5 | 4.4 |

மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்